RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt2311

OPEN ACCESS

# சிற்றிலக்கிய வரலாற்றில் கிறித்தவ அம்மானைகளின் பங்களிப்பு

லூ. அருண் பிரகாஷ் [அ, *], ஞா. பெஸ்கி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா

# The Contribution of the Christian Ammanais (a type of Tamil poetry in the form of questions and answers) to the History of Minor Literature

L. Arun Prakash [a, *], G. Beschi [a]

[a] Research Department of Tamil, St. Joseph's College (Autonomous), (Affiliated to Bharathidasan University) Tiruchirappalli-620002 Tamil Nadu, India

* Corresponding Author: aruntvd102@gmail.com

Received: 16-08-2022
Revised: 28-10-2022
Accepted: 20-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

In the area of the Tamil language, which has a rich literary heritage of over 2,000 years that extends from Sangam literature to today's modern literature, the minor literature is known to be the product of the Naayakar period. Against the backdrop of various religions, which have contributed from time to time to the great work of enriching Mother Tamil, many minor literature books have emerged in Tamil. Christian Ammanais is the most famous of this type of minor literature, which originated in Tamil in the context of Christianity. This article explores the place of Christian Ammanai in Tamil minor literature and discusses its merits.

**Keywords:** Devotional literature, Minor literature, Ammanai, Mother of Lourdes, St. John De Britto

## முன்னுரை

காலந்தோறும் தமிழிலக்கியத்தின் வடிவமும் பாடுபொருளும் மாற்றம் பெற்று வந்துள்ளன. நீண்ட நெடிய அளவிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு குறுகிய அளவினை உடையதாகச் சிற்றிலக்கியம் அமைகின்றது. இத்தகைய சிற்றிலக்கியங்களுள் பெண்கள் விளையாடும் விளையாடும் விளையாட்டை அடியொற்றி உருவானதாக அம்மானை அமைகின்றது. அம்மானை என்னும் வகைமையின் அடிப்படையில் உருவான கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் தனித்ததொரு இடத்தைப் பெற்றுள்ளன. இத்தகைய கிறித்தவ அம்மானைகளின் வரலாற்றையும் அவற்றின் சிறப்பையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சிற்றிலக்கியம்- வரையறை

தமிழில் சிற்றிலக்கியம் பற்றித் தொல்காப்பியர் செய்யுளியல் எனும் இயலில் விருந்து என்னும் தலைப்பில்,

“விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”

என்று கூறுகின்றார். இதில் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்பது காலந்தோறும் புதிதாகச் செய்யுள்கள் அல்லது இலக்கியங்கள் பலவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டுகிறது. இவ்வாறு வெளிவரும் இலக்கிய வகைமைகளுள் ஒன்றாகச் சிற்றிலக்கியம் அமைகிறது.

"தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு கி.பி.5ஆம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து கி.பி.7ஆம் நூற்றாண்டில் கோவைச் செடியாகி 8ஆம் நூற்றாண்டில் உலா மரமாக மாறி கி.பி.9ஆம் கலம்பகமாகக் கிளைத்து 11ஆம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பி வந்து 12ஆம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழ் என்னும் மொட்டுயாகி கி.பி.14ஆம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து பின் 18ஆம் நூற்றாண்டில் குறவஞ்சியாக கனிந்து வந்தது என அறிஞர் பெருமக்கள் சிற்றிலக்கியம் பற்றிக் கூறுகின்றனர்" (Shunmugam pillai, 1998).

சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் பாடல் எண்ணிக்கையிலோ அல்லது அடிகளின் எண்ணிக்கையிலோ குறைந்தே காணப்படுகின்றன. பாட்டுடைத்தலைவனின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வின் ஒரு பகுதியை மட்டும் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பெறுவது சிற்றிலக்கியம் ஆகும். மேலும் அதில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்றைக் குறைத்து கூறும் வகையில் பாடல்கள் அமையப் பெறுகின்றன.

சிற்றிலக்கியத்திற்கான வரையறையை அகராதிகள் பின்வருமாறு சுட்டுகின்றன. "பிரபந்தம் - சிற்றிலக்கியம் Literature classified as smaller work In Tamil" எனக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும், "பிரபந்தம் - நூல் கட்டுரை, இசையுறு, 96 வகைப்பட்ட நூல்" எனக் கௌராவின் தமிழ் அகராதியும் விளக்குகின்றன. இவ்வாறு அகராதிகளிடையே பொருள் மாறுபாட்டினை இங்கே காணமுடிகின்றது.

## சிற்றிலக்கியத்தின் வகைகள்

சிற்றிலக்கியங்களின் வகைகள் குறித்துப் பாட்டியலாளர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவிவந்துள்ளன. எனினும் 18ஆம் நூற்றாண்டில் எழுந்த பிரபந்த மரபியல் என்னும் பாட்டியல் நூலில்,

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்

தொண்ணூற் றாறெனும் தொகைய தான

முற்பக ரியல்பை முன்னுறப் பாடும்

பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே"

எனக் கூறப்பெற்றுள்ளது. பிரபந்த மரபியல் மட்டுமல்லாது பிரபந்த தீபிகையும் சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது (Gopalayar, 1982). சிற்றிலக்கியத்தின் வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

ஆற்றுப்படை, அந்தாதி, மாலை, பதிகம், கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்னும் பதினான்கு வகைகளின் பொருண்மைக்குள் இந்த 96 வகையான தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அடங்கும்.

மேலும் சிற்றிலக்கிய வகைகள் கீழ்க்கண்டவாறு வெவ்வேறு நிலைகளில் பகுத்துக் கூறப்பெறுகின்றன. 1. பொருள் அடிப்படையில் - அகப்பொருள், புறப்பொருள். 2. எண்ணிக்கை அடிப்படையில் - பத்து, பதிகம், சதகம், பஞ்சகம், முதலியன. 3. யாப்பு அடிப்படையில் - அந்தாதி, ஓர், வெண்பா, இன்னிசை, நேரிசை முதலியன. 4. பொருண்மை அடிப்படையில் - தூது, உலா, பிள்ளைத்தமிழ் முதலியன. 5. சொல்முடிபு அடிப்படையில் - மாலை, வாழ்த்து, செய்யுள்நிலை முதலியன. 6. விளையாட்டு அடிப்படையில் - ஊசல், அம்மானை. 7. நாட்டுப்புற இலக்கியவகை அடிப்படையில் - பள்ளு, குறவஞ்சி, குறம் முதலியன.8. கதைப்பாடல் அடிப்படையில் - அல்லி, அரசாணி, மாலை, பெரிய எழுத்து, தூது முதலியன. 9. பெண்கள் அடிப்படையில் - புகழ்ச்சி மாலை, தாரகை மாலை. 10. இசை அடிப்படையில் - கீர்த்தனை, தெம்மாங்கு, கும்மி முதலியன. 11. இசைநாடக

அடிப்படையில் - பள்ளு, குறவஞ்சி முதலியன. 12. நீதி அடிப்படையில் - தண்டலையார் சதகம் முதலியன. 13. பக்தி அடிப்படையில் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியன. 14. தத்துவ அடிப்படையில் - நெஞ்சுவிடு தூது முதலியன. 15. தொழில் அடிப்படையில் - ஓடப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு" இவ்வாறு வகைப்படுத்தப்படும் சிற்றிலக்கியங்களை அவற்றின் பொருண்மை அடிப்படையில் சமயங்கள் சார்ந்தும் வகைப்படுத்தலாம். கிறித்தவக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு உருவான கிறித்தவச் சிற்றிலக்கியங்களும் தமிழிலக்கியப் பரப்பில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன (Eswarapillai, 2005).

## கிறித்தவச் சிற்றிலக்கியங்கள்

கிறித்தவச் சிற்றிலக்கியங்களின் வரலாறு என்பது வீரமாமுனிவர் காலத்திலிருந்தே தொடங்குகின்றது. எனவே தான் வீரமாமுனிவரைக் 'கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடி' என்று அழைப்பர் (Arockiasamy, 2010). மேலும் கிறித்துவச் சிற்றிலக்கியங்களைப் பொறுத்தவரை கிறித்தவம் முன்வைக்கும் இறைவனையோ, புனிதர்களையோ, அடியாரையோ தலைவனாகக் கொண்டு பாடப்படுகின்றன.

கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடியாக அறியப்படுகின்ற வீரமாமுனிவர், திருக்காவலூர்க் கலம்பகம், அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, கித்தேரியம்மாள் அம்மானை, தேவமாதா பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். அதன் பின் எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை, அந்தோணிக்குட்டி அண்ணாவியார், வேதநாயக சாஸ்திரி, பி.கே. ஜார்ஜ், தேவநேயப் பாவாணர், புலவர் தாமஸ், புலவர் மணி ஜோசப் ராயர், அருள்செல்லத்துரை, மு. நல்லசாமி பண்டிதர், மணிவளன் போன்றோர் 20ஆம் நூற்றாண்டிலும் சிற்றிலக்கியங்கள் படைத்துள்ளனர்.

## அம்மானை

அம்மானை என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுக்களுள் ஒன்று. அம்மானையானது கதைப்பாடல்களால் அமையப்பெற்றது. பெரும்பாலும் அம்மானை காய் மரக்கட்டையால் செய்யப்பெற்று இருக்கும். அதனை இரண்டு (அ) மூன்று மகளிர் சேர்ந்து விளையாடுவது இயல்பு ஆகும். பாட்டுடைத்தலைவனையும், அவன் செய்த செயல்களையும் கருப்பொருளாகக் கொண்டு பாடப்பெறுவது அம்மானையாகும்.

சங்ககால மகளிர் வாழ்வியலில் அம்மானை ஒரு கதைப்பாடல் கொண்ட அமைப்பாகக் காணப்பெற்றது. தமிழரின் விளையாட்டுக்கள் பல இருப்பினும் அவற்றுள் பெரும்பான்மையானவை மகளிருக்கான விளையாட்டுக்களே ஆகும். அவற்றுள் முக்கியமான அம்மானையானது ஏழாங்காய் ஆட்டம், கல்லங்காய், அம்மானைப் பண்ணாங்கல், கழற்சி ஆட்டம், சுட்டிப்பிடித்தல் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெறுகின்றது.

அம்மானை பற்றிய அகராதிகளின் கருத்துகள் பின்வருமாறு அமைகின்றன. அம்மானை - "பாடலின் இறுதியில் அம்மானை என்று முடியும் வகையில் எழுதப்பெறும் சிற்றிலக்கிய வகை" எனக் க்ரியாவின் தற்காலத் தமிழகராதியும், "அம்மானை - கலம்பக உறுப்பு, மகளிர் விளையாடும் போது பாடும் பாட்டு" எனக் கௌராவின் தமிழ் அகராதியும் எடுத்துரைக்கின்றன.

## கிறித்தவ அம்மானைகள்

இந்து சமயத்திலிருந்து கிறித்துவ சமயத்தைத் தழுவி வந்த மக்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தாலும் நாட்டுப்புறப் பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கினர். கிறித்தவத்தைத் தழுவிய அவர்கள் இறையேசுவின் வரலாற்றினையும், இறையடியார்களின் வரலாற்றினையும் கதைப்பாடல்களாகப் பாடிவந்தனர். இவ்வாறு நாட்டுப்புறக் கிறித்தவர்களிடையே வழங்கிவந்த கதைப்பாடலாகவே கிறித்தவ அம்மானைகள் அமைந்துள்ளன.

வீரமாமுனிவர் இயற்றிய கித்தேரியம்மாள் அம்மானையே முதன்மையான கிறித்தவ அம்மானையாகத் திகழ்கின்றது. இதனைத் தொடர்ந்தே இயேசுநாதர், அன்னை மரியாள், புனிதர்கள் மற்றும் விவிலியச் சான்றோர்கள் போன்றோரின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு அம்மானைகள் படைக்கப்பெற்றுள்ளன.

அவற்றுள் புனித அந்தோணியார் அம்மானை, புனித பெரியநாயகி அன்னை அம்மானை, புனித லூர்து மாதா அம்மானை, புனித அருளானந்தர் அம்மானை, புனித இசிதோர் அம்மானை, புனித செபஸ்தியார் அம்மானை, புனித சவேரியார் அம்மானை ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

## புனித அந்தோணியார் அம்மானை

புனித அந்தோணியார் போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பென் நகரில் ஓர் உயர் குடியில் பிறந்தார். இவர் இறைவன்மீது கொண்ட பற்றால் சிறுவயதிலேயே புனித வின்சென்ட் தோற்றுவித்த துறவறசபையில் இணைந்தார். அதன் பின் மறைபரப்புப் பணிக்காகச் சென்ற இடங்களில் இறைவனின் திருவருளால் பல்வேறு புதுமைகளை நிகழ்த்தினார். 1231ஆம் ஆண்டு ஜூன் பதிமூன்றாம் நாள் இயற்கை எய்தினார். அந்நாளை திருச்சபையானது திருநாளாகக் கொண்டாடுகிறது.

இந்தப் புனிதரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு புனித அந்தோணியார் அம்மானையினை 1988இல் ஆசிரியர் அந்தோணி இயற்றினார். இவர் இந்நூலில் புனித அந்தோணியாரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் செய்த எண்ணற்ற அற்புதங்களையும் எடுத்துரைத்துள்ளார். அந்தோணியார் மீன்களுக்குப் போதனை செய்ததாகக் கூறப்பெறுகின்ற அந்தப் பகுதியில் மட்டும் 92 வகையான மீன்கள் இவரின் அருள்பொழிவைக் கேட்டதாகக் கூறுகின்றார் ஆசிரியர்.

மேலும் அந்தோணியார் அம்மானையானது காப்பு, அவையடக்கம் ஆகியவை நீங்கலாக 30 சிறு பிரிவுகளையும் 670 கண்ணிகளையும் 62 விருத்தங்களையும் கொண்டுள்ளது. இறுதியாக புனித அந்தோணியாரைப் போற்றும் வண்ணம் புகழ்ச்சி மாலையானது பாடப்பெற்றுள்ளது.

## புனித பெரியநாயகி அன்னை அம்மானை

இயேசுவின் தாயாகிய மரியாளுக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று பெரியநாயகி அன்னை என்பதாகும். அன்னை மரியாளின் தோற்றத்தைத் தமிழ்ப்பெண்ணாக உருவகித்து வீரமாமுனிவர் விருத்தாச்சலத்திற்கு அருகிலுள்ள கோனாங்குப்பம் என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் அன்னைக்குப் பெரிய நாயகி அன்னை என்று பெயர் சூட்டினார்.

இவரைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு இலங்கையைச் சேர்ந்த சேகரம் பிள்ளை என்பார் புனித பெரியநாயகி அம்மானையினை 1988இல் இயற்றியுள்ளார். இதில் காப்பு பருவம் மட்டுமே பாடப்பெற்றுள்ளது. 356 கண்ணிகளையும் 7 விருத்தங்களையும் கொண்டுள்ளதோடு 10 பெரும் பிரிவுகளாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இந்நூலில் அன்னை பெரிய நாயகியினைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அன்னையின் அற்புதங்களை எடுத்துரைக்கும் நிகழ்வுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதியாக அன்னையை நோக்கிய மன்றாட்டு மாலையானது பாடப்பெற்றுள்ளது.

## புனித லூர்துமாதா அம்மானை

பிரான்சு நாட்டின் பிரெனிஸ் மலை அடிவாரத்தில் லூர்து என்னும் மலை உள்ளது. அங்கு பிரான்சிஸ் சுபிருசு என்பவருக்கு மகளாகப் பிறந்த பெர்னதெத்திற்கு லூர்து நகரை அடுத்த நசபியேல் குன்றின் மீது அன்னையாளவள் பெர்னதெத்திற்குக் காட்சியளித்தாள். 1858 மார்ச் 25ஆம் நாள் லூர்து நகரிலுள்ள மசபேயில் என்னும் இடத்தில் அன்னையானவள் பெர்னதெத்திற்கு காட்சி தந்ததோடு மட்டுமல்லாமல் 'நானே அமல உற்பவி' என்று கூறி விடைபெற்றாள் அன்னை இவ்வாறு

முதன்முதலில் காட்சி கொடுத்த நாளான பிப்ரவரி 11ஆம் நாள் அன்னையின் திருநாளாக கடைபிடிக்கப்படுகின்றது.

லூர்து மலையில் காட்சியளித்த புனித லூர்து அன்னையைப் பாட்டுடைத்தலைவியாகக் கொண்டு 1987ஆம் ஆண்டு எஸ். யாகப்ப முதலியாரால் இயற்றப்பெற்ற புனித லூர்துமாதா அம்மானையானது அன்னையின் மாட்சி பற்றியும், அன்னை மரியாள் செய்த புதுமைகள் பற்றியும் கூறுவதாகத் திகழ்கின்றது.

இந்நூலில் அன்னைக்கென்று சிறப்புப்பாயிரம் பாடப்பெற்றுள்ளதோடு, காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலானவை பாடப்பெற்றுள்ளன. இதோடு மரியாவிற்கு வணக்கமும், தூசையப்பருக்கு வணக்கமும் பாடப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த அம்மானை 755 அம்மானைக் கண்ணிகளையும், 12 விருத்தப்பாவினையும் கொண்டுள்ளது.

## புனித அருளானந்தர் அம்மானை

புனித அருளானந்தர் அம்மானையினை 1988ஆம் ஆண்டு இயற்றியவர் சாலமோன் ஆவார். அருளானந்தர் அம்மானையானது மறைபரப்புப் பணிக்காகத் தமிழகம் வந்து தன்னுயிரைத் தியாகம் செய்த ஜான் டி பிரிட்டோ எனப்படும் அருளானந்தரின் வாழ்வியலை மையமாகக் கொண்டே எழுதப்பெற்றுள்ளது. புல்லூரை நெல்லூர் ஆக்கினார். மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பனங்குடி, வேளாங்குளம் ஆகிய ஊர்களில் தங்கி அதிக நாட்கள் பணிபுரிந்தார். மறவநாட்டிற்குச் சென்று போதித்த போது மன்னன் சேதுபதியின் சூழ்ச்சியால் அவர் ஓரியூரில் கொலை செய்யப்பட்டார். இந்த அம்மானையில் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலியனவும் புனிதரின் வாழ்க்கைச் சிறப்பினை எடுத்துரைக்கும் வண்ணம் ஒரு சிறப்புப் பாயிரமும் கொண்டு தொடங்கப்பெற்றுள்ளது. அருளானந்தர் அம்மானையானது 1 விருத்தப்பாவையும், 42 கண்ணிகளையும், 16 சிறு பிரிவுகளையும் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இதில் இறுதியாக ஒரு வாழ்த்துப் பாடலும் செபமும் இடம்பெற்றுள்ளன.

## புனித இசிதோர் அம்மானை

ஐரோப்பியக் கண்டத்தில் ஸ்பெயின் நாட்டுத் தலைநகரான யாத்ரித்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர் இசிதோர். உவர்ந்தர் கோஸ் என்னும் செல்வந்தரிடம் பணியாளராகப் பணியாற்றி, மாதரசி என்பவரைத் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டார். தாம் இறக்கும் நாளை முன்பே அறிந்தவராய் திகழ்ந்தவர். அவர் இறந்த பின்பு பத்தாண்டுகள் கழித்து அவருடைய கல்லறையைத் தோண்டிப் பார்த்தபோது இறைவனின் திருவருளால் அவரது உடல் அழியாது இருந்தது. பின்னர் மாத்ரித் நகரில் புனித அந்தேரியா ஆலயத்தில் அவ்வுடலை அடக்கம் செய்தனர். இவரை நோக்கி மன்றாடியவர்களுக்கு பல புதுமைகள் நிகழ்ந்ததாக நம்பப்படுகிறது.

இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு புனித இசிதோர் அம்மானையினை பிரெலிஸ் 1988ஆம் ஆண்டு இயற்றினார். புனித இசிதோர் அம்மானையானது காப்பு தொடங்கி வாழி வரை 20 சிறுபிரிவுகளைக் கொண்டுள்ளது. 2 வெண்பா பாடல்களையும், 504 கண்ணிகளையும், 17 விருத்தங்களையும் கொண்டுள்ளது. இசிதோர் செய்த எண்ணற்ற அற்புதங்களையும் எடுத்துரைக்கும் வகையில் இந்த அம்மானை படைக்கப்பெற்றுள்ளது.

## புனித செபஸ்தியார் அம்மானை

உரோமைப் பேரரசன் தியோக்கிளைசியன் கிறித்துவர்களுக்கு எதிராக நடத்திய கொடுமைகளில் இறந்தவர்களுள் ஒருவர் எனக் கருதப்பெற்ற செபஸ்தியார் பின் காப்பாற்றப்பட்டுக் கிறித்துவர்களுக்காக மிகப்பெரிய போராட்டம் ஒன்றை நடத்தினார். அவரை இறுதியாகப் போர்வீரர்கள் மரத்தில் கட்டிவைத்து அம்புகளை எய்திக் கொலை செய்தனர்.

இவரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு புனித செபஸ்தியார் அம்மானை 1988ஆம் ஆண்டு புதுவை வித்துவான் சாமிநாதப்பிள்ளையால் இயற்றப்பட்டுள்ளது. புனித செபஸ்தியார் அம்மானையானது காப்பு, அவையடக்கம் நீங்கலாக, சேசுநாதர் வணக்கம், அப்போஸ்தலர்களுக்கு வணக்கம், கன்னிமரியாள் வணக்கம் ஆகியவற்றைக் கொண்டு புனித செபஸ்தியாரின் வரலாற்றினை எடுத்துரைக்கும் வண்ணம் பாடப்பெற்றுள்ளது. 47 விருத்தங்களையும், கலிப்பா மூன்றினையும், தாழிசை 17ஐயும் கொண்டு செபஸ்தியார் அம்மானையானது பாடப்பெற்றுள்ளது. இறுதியாகச் செபஸ்தியாருக்கான மன்றாட்டும் இடம்பெற்றுள்ளது.

## புனித சவேரியார் அம்மானை

புனித இலோயலா இஞ்ஞாசியார் பாரிஸ் நகருக்கு வந்து சவேரியாரோடு தங்கிப் பயின்றபோது சவேரியாரிடமிருந்த அறிவுத்திறனைக் கண்டு இஞ்ஞாசியார் வியப்புற்றார். சவேரியாருக்கு இருந்த உலக ஆசையை நீக்கி அவருக்கு இறைப்பற்றை ஊட்டினார். அப்பொழுது ஒருவன் உலகமெலாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்குக் கிடைக்கும் பயன் என்ன என்னும் இறைவாக்கினைக் கூறி இஞ்ஞாசியார் சவேரியாரைத் தன்வயப்படுத்தினார். அதன்பின் இயேசுசபையில் இணைந்த சவேரியார் மறைபரப்புப் பணிக்காக இந்தியா வந்தார். அதிலும் குறிப்பாகத் தென்தமிழகக் கடற்கரையோர மக்களுக்குத் தனது போதனையை வழங்கினார். மறைபரப்பும் பணிக்காகப் பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். இறுதியாக உடல் நலிவுற்று சஞ்சியான் தீவில் இறந்தார். தன் இறப்பைப் பன்னிரெண்டு நாட்களுக்கு முன்பே அறிந்திருந்தார்.

இவரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு புனித சவேரியார் அம்மானையைப் 1989 ஆம் ஆண்டு முதன்முதலில் பதிப்பித்தவர் ஆ.பி. அந்தோணி இராசு ஆவார். இந்த அம்மானையில் அவையடக்கம் என்பது இல்லை. ஆனால் கடவுள் வாழ்த்து, பாயிரம் முதலானவை இடம் பெற்றுள்ளன.

புனித சவேரியார் அம்மானையானது 65 பெரும் பிரிவுகளையும், 2217 கண்ணிகளையும் கொண்டுள்ளது. அதனோடு 65 விருத்தப்பாக்களையும் பெற்றுள்ளது. புனித சவேரியார் அம்மானையே அதிகமான எண்ணிக்கையில் கண்ணிகளைப் பெற்றுள்ள கிறித்துவ அம்மானையாகும். இவ்வாறு பல்வேறு நிலைகளில், காலங்களில் தோன்றிய இறையடியார்கள், புனிதர்கள் கொண்டு கிறித்தவ அம்மானைகள் படைக்கப்பெற்றுள்ளன.

## முடிவுரை

பழைமையும், புதுமையும் பொருந்திய தமிழ்மொழியில் தோன்றிய பல்வேறு கிறித்தவச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக அம்மானை அமைந்துள்ளது. கிறித்தவரால் வழிபடப்படுகின்ற இயேசுநாதரையும், அவரின் தாயாராகிய மரியாளையும், கிறித்தவத்திற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த இறையடியார்களாகிய புனிதர்களையும் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இந்த அம்மானைகள் பாடப்பெற்றுள்ளன. பாட்டியல் நூல்கள் முன்வைக்கும் அம்மானைக்குரிய இலக்கணத்தை நிறைவு செய்துள்ள இந்நூல்கள் தமிழுக்கும் கிறித்தவத்திற்கும் கிடைத்த அளப்பரிய செல்வமாக அமைந்துள்ளன.

## References

Arockiasamy, R. (2010) History of Christian literature, Poorana Reetha Publications, Thanjavur, India.

Eswarapillai, T. (2005) Thamizhil chittrilakkiya varalaru, Tamil University, Thanjavur, India.

Gopalayar, (1982) Pirabhantha marabiyal, International Institute of Tamil studies, Chennai, India.

Shunmugampillai, M. (1998) Chittrilakkiya vagaikal, Manivasagar Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License